முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2017 யூலை

## (AA31) நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்

(Financial Accounting and Reporting)

2017-07-15
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் (கவனமாக வாசிக்கவும்):**
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலம்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தரவும்.***
  (3) ***விடைகள்*** *உமக்குத் தரப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*
  (5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள்* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின்*** *நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

இந்தப் பகுதியிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

நிதி அறிக்கையிடலுக்கான கோட்பாட்டு வேலைச் சட்டகம் நிதிக் கூற்றுக்களின் நோக்கங்கள், நிதிக் கூற்றுக்களிலுள்ள தகவல்களின் பிரயோசனத்தினைத் தீர்மானிக்கும் தரரீதியான குணாம்சங்கள், நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் மூலகங்களின் வரைவிலக்கணம், ஏற்பிசைவு மற்றும் அளவீடு, மற்றும் மூலதன மற்றும் மூலதனப் பராமரிப்புக் கோட்பாடுகள் பற்றிக் கையாள்கின்றது.

(a) தகவல்களின் பயன்பாட்டினை அதிகரிக்கும் தர ரீதியான குணாம்சங்கள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) வருமானத்தின் (income) ஏற்பிசைவுத் தேர்வுநிபந்தனைகளைக் **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

(a) இலங்கையிலுள்ள கம்பனிகளுடன் தொடர்புபட்ட சட்டவாக்கங்கள் (legislations) / சட்டங்கள் (Acts) மூன்றினைக் (03) **கூறுக.** (03 புள்ளிகள்)

(b) இலங்கை காப்பாவணங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழு (Securities and Exchange Commission) தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள் இரண்டு (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

(a) LKAS 23 – "கடன்படுகைக் கிரயம்" நியமத்தின்படி "தகைமைபெற்ற சொத்து (Qualifying Asset)" எனும் பதத்தினை **பொருள்வரையறை செய்க.** (02 புள்ளிகள்)

(b) LKAS 18 – "வருமானம்" நியமத்திற்கு அமைவாக, பொருட்களின் விற்பனையிலிருந்து வருமானத்தை ஏற்பிசைவு செய்வதற்கு திருப்திசெய்யப்பட வேண்டிய மூன்று (03) நிபந்தனைகளைக் **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

காசுப்பாய்வுக் கூற்றானது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான காசுப் பாய்வுகளை தொழிற்பாட்டு, முதலீட்டு மற்றும் நிதியளிப்புச் செயற்பாடுகளின் கீழ் வகைப்படுத்தி அறிக்கையிடுகின்றது.

(a) முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான (Investing activities) காசுப் பாய்வுகளுக்கு மூன்று (03) உதாரணங்கள் **கூறுக.** (03 புள்ளிகள்)

(b) காசுப்பாய்வுக் கூற்றுக்களிலிருந்து விலக்கப்படும் பணம் சாராத ஊடுசெயல்களுக்கு இரண்டு (02) உதாரணங்கள் **கூறுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

இப்பகுதியிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

(a) **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக பணிப்பாளர் சபையினால் 2017 மே 15 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

கீழ்வரும் தகவல்கள் **வ/ப ABC கம்பனி** தொடர்புபட்டவையாகும் :

(1) 2017 மார்ச் 31 ஆந் திகதியில் கம்பனி ஒரு தொகைத் தொக்குகளை ரூ. 750,000/- ஆக கிரயத்தில் ஏற்பிசைவு செய்திருந்தது. அந்தத் தொக்குகள் 2017 ஏப்ரல் 20 ஆந் திகதி ரூ.700,000/- க்கு விற்பனை செய்யப்பட்டன.

(2) 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி கம்பனியின் பெரிய உற்பத்திப் பொறியொன்று தீயினால் அழிவடைந்தது. அதனால் ஏற்பட்ட நட்டம் ரூ. 5.5 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேற்படி நிகழ்வுகளை LKAS 10 - "அறிக்கையிடற் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள்" எனும் நியமத்திற்கு அமைவாக எவ்வாறு கணக்கிடுவீர்கள் என்பதை உரிய காரணங்களுடன் **கூறுக.** (04 புள்ளிகள்)

(b) 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி **வ/ப KYC கம்பனி** (குத்தகைக்குத் தருநர் - lessor) வாடிக்கையாளர் ஒருவருக்கு (குத்தகைக்குப் பெறுநர்) 5 ஆண்டு நிதிக் குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் எந்திரமொன்றினை விற்பனை செய்தது. எந்திரத்தின் கிரயம் ரூ. 2.4 மில்லியனும் காசு விற்பனை விலை ரூ. 3 மில்லியனும் ஆகும்.

இந்தக் குத்தகை வசதிக்கு உரிய வட்டி வீதம் ஆண்டிற்கு 18% ஆகும். வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணம் ரூ. 959,325/-. முதலாவது குத்தகைத் தவணைக் கட்டணம் குத்தகைக்குப் பெறுநரால் 2017 மார்ச் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேற்படி குத்தகை ஊடுசெயல் தொடர்பில் குத்தகைக்குத் தருநரின் (lessor) 2017 மார்ச் 31 இல் நிதிநிலைக்கூற்று மற்றும் 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றின் பிரித்தெடுப்புக்களை (extracts) **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

2017 மார்ச் 31 மற்றும் 2016 மார்ச் 31 ஆகிய திகதிகளில் **வ/ப டிவைன் ஹோல்டிங்ஸ்** நிதிநிலைக் கூற்றுக்கள் கீழ்வருமாறு :

**வ/ப டிவைன் ஹோல்டிங்ஸ்**

**நிதிநிலைக் கூற்றுக்கள்** *(ரூ.'000)*

| | **2017 மார்ச் 31 இல்** | **2016 மார்ச் 31 இல்** |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்) | 11,000 | 10,100 |
| திரள் தேய்மானம் | (2,400) | (1,950) |
| முன்கொணரற் பெறுமதி | **8,600** | **8,150** |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகுள் | 9,070 | 8,400 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 8,200 | 6,900 |
| காசும் காசுச் சமானங்களும் | 470 | 600 |
| | **17,740** | **15,900** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **26,340** | **24,050** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 6,000 | 6,000 |
| கைக்கொள் இலாபம் | 16,610 | 13,910 |
| **மொத்த உரிமையாண்மை** | **22,610** | **19,910** |
| **நடைமுறையல்லாப் பரிப்புகள் :** | | |
| ஊழியர் பயன்கள் (பணிக்கொடை ஏற்பாடு) | 1,300 | 1,200 |
| நீண்டகால கடன்கள் | - | 1,100 |
| | **1,300** | **2,300** |
| **நடைமுறைப் பரிப்புகள் :** | | |
| குறுங்காலக் கடன்கள் | 200 | 300 |
| வியாபார சென்மதிகள் | 1,370 | 800 |
| கடன்மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி | 260 | 240 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 600 | 500 |
| | **2,430** | **1,840** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **26,340** | **24,050** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானவரிச் செலவு ரூ. 300,000/-.

(2) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த வட்டிச் செலவு ரூ. 250,000/-.

(3) ஆண்டின்போது பணிக்கொடையாக ரூ. 250,000/- செலுத்தப்பட்டது.

(4) 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டில் ஏனைய முற்றடக்க வருமானம் எதுவும் இருக்க வில்லை. அத்துடன் ஆண்டின் காலப்பகுதியில் பங்கிலாபம் எதுவும் செலுத்தப்படவோ அல்லது வெளிப்படுத்தப்படவோ இல்லை.

(5) ஆண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் எதுவும் விற்பனை செய்யப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

***நேரில் முறையில்*** 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **வ/ப டிவைன் ஹோல்டிங்ஸ்** இன் காசுப்பாய்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 07

நீங்கள் **வ/ப PG ஹோல்டிங் (தனி) கம்பனியின்** புதிதாக நியமனம் பெற்ற கணக்காளர் ஆவீர்கள். கம்பனியின் முகாமைப் பணிப்பாளர் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்குமாறு உங்களைக் கேட்டுள்ளார்:

- கம்பனியின் திரவநிலை (Liquidity)
- கம்பனியின் இலாபத்தன்மை (Profitability)
- தொழிற்படு மூலதன முகாமையின் வினைத்திறன் (Efficiency)

அறிக்கை தயாரிப்பது தொடர்பாக 2017 மார்ச் 31 மற்றும் 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்குக் கீழ்வரும் விகிதங்களை நீங்கள் கணித்துள்ளீர்கள் :

| விகிதம் | 2017 | 2016 |
|---|---|---|
| நடப்பு விகிதம் (Current Ratio) | 1.2 தடவைகள் | 2 தடவைகள் |
| விரைவுச் சொத்து விகிதம் | 0.25 தடவைகள் | 1.2 தடவைகள் |
| மொத்த இலாப வீதம் | 23% | 35% |
| நிகர இலாப வீதம் | 15% | 20% |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் | 45 நாட்கள் | 30 நாட்கள் |
| கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம் | 20 நாட்கள் | 15 நாட்கள் |

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேலே கணிக்கப்பட்ட விகிதங்களைப் பயன்படுத்தி, கம்பனியின் திரவ நிலை, இலாபத்திறன் மற்றும் தொழிற்படு மூலதன முகாமையின் வினைத்திறன் ஆகியன தொடர்பில் முகாமைப் பணிப்பாளருக்கு சமர்ப்பிப்பதற்காக அறிக்கையொன்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

இந்தப் பகுதியிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

2017 மார்ச் 31 இல் **றோயல் PLC** யின் பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது :

**றோயல் PLC**

**2017 மார்ச் 31 ஆந் திகதியில் பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் - 2,000,000 சாதாரண பங்குகள் | | 20,000 |
| 2016 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 3,880 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம்(கிரயத்தில்) : | | |
| காணியும் கட்டடமும் (காணிப் பெறுமதி – ரூ.7,500,000/-) | 12,500 | |
| மோட்டார் வாகனங்கள் | 18,000 | |
| அலுவலக உபகரணம் | 6,000 | |
| தளபாட இணைப்புகள் | 2,400 | |
| திரள் தேய்மானம் - 2016 ஏப்ரல் 01 இல்: | | |
| கட்டடம் | | 1,920 |
| மோட்டார் வாகனங்கள் | | 3,600 |
| அலுவலக உபகரணம் | | 1,200 |
| தளபாட இணைப்புகள் | | 1,440 |
| தொக்குகள் (2017 மார்ச் 31 இல்) கிரயத்தில் | 1,500 | |
| 12.5% வங்கிக் கடன் | | 5,000 |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 11,700 | 8,210 |
| ஐயுறவுக் கடன் ஏற்பாடு – 2016 ஏப்ரல் 01 இல் | | 600 |
| வரிமதிப்பாண்டு 2015/16 க்கு செலுத்தவேண்டிய வரி | | 1,400 |
| வங்கி மீதி | 400 | |
| காசுக்கையிருப்பு | 140 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 52,000 | 78,200 |
| ஏனைய வருமானம் | | 800 |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் | 1,600 | |
| நிருவாகச் செலவுகள் | 6,800 | |
| விநியோகச் செலவுகள் | 8,750 | |
| நிதிச் செலவுகள் | 2,460 | |
| செலுத்திய வருமான வரி | 2,000 | |
| | **126,250** | **126,250** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் கிடைக்கப்பெற்றுள்ளன :

(1) 2016 செப்ரெம்பர் 30 ஆந் திகதியில் கம்பனி மோட்டார் லொறியொன்றினை ரூ. 800,000/- க்கு விற்பனை செய்தது. இந்த லொறி 2013 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூ. 1,400,000/- க்கு கொள்வனவு செய்யப்பட்டது. இந்த லொறியின் விற்பனை தொடர்பில் விற்பனைப் பெறுவனவு ரூ. 800,000/- ஏனைய வருமானக் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்பட்டதைத் தவிர வேறெந்தப் பதிவுகளும் லொறி விற்பனை தொடர்பில் மேற்கொள்ளப்படவில்லை.

(2) ஆண்டின்போது கம்பனி கீழ்வரும் சொத்துக்களை கொள்வனவு செய்தது :

| திகதி | சொத்து | பெறுமதி (ரூ.) |
|---|---|---|
| 01.12.2016 | புத்தக அடுக்கி | 600,000 |
| 01.03.2017 | அதிக இயல்வலு பதிகருவி | 900,000 |

(3) தேய்மானம் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் கணிப்பிடப்படுகிறது. ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | 25 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனம் | : | 5 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | : | 5 ஆண்டுகள் |
| தளபாட, இணைப்புகள் | : | 10 ஆண்டுகள் |

(4) முன்னைய ஆண்டில் கடன்பட்டோரிடமிருந்து வருமதியாக இருந்து அறவிட முடியாததாக பதிவழிக்கப்பட்ட ரூ.100,000/- இந்த ஆண்டின்போது அறவிடப்பட்டு வியாபார வருமதிகள் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்பட்டது. மேலும், ஆண்டின் இறுதியில் மேலதிக ஐயக்கடன் ஏற்பாடாக ரூ.280,000/- ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(5) 2017 மார்ச் 31 ஆந் திகதி கீழ்வரும் செலவுகள் கணக்கேடுகளில் அட்டுறுவாகியிருக்கவில்லை :

| | ரூ. |
|---|---|
| எரிபொருள் கட்டணம் | 685,000 |
| மின் மற்றும் நீர்க் கட்டணம் | 68,000 |

(6) 2017 மார்ச் மாதத்திற்கான கடன் தவணைக் கட்டணம் ரூ. 100,000/- ஆனது 2017 மார்ச் 31 இல் நிலுவையாக இருந்தது. இந்தத் தவணைக் கட்டணத்தில் அடங்கியுள்ள வட்டித் தொகை ரூ.60,000/-. 2017 மார்ச் 31 இல் நிலுவையிலுள்ள கடன் மீதியின் ¼ பங்கு அடுத்த ஆண்டில் செலுத்தப்பட வேண்டும்.

(7) 2017 மார்ச் 30 ஆந் திகதி கம்பனிக்கு பொருட்கள் வழங்குநரொருவர் தம்முடனான ஒப்பந்த மீறலுக்காக கம்பனிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார். 2017 மே 31 ஆந் திகதி அந்த வழங்குநருக்கு நட்டஈடாக ரூ. 150,000/- செலுத்தவேண்டுமென நீதிமன்றம் கட்டளையிட்டது.

(8) வரிமதிப்பாண்டு 2016/17 க்கான கம்பனியின் வருமான வரிப்பரிப்பு ரூ.900,000/- ஆக மதிப்பிடப் பட்டது.

(9) இறுதித் தொக்கின் நிகர தேறுகைப் பெறுமதி ரூ. 1,450,000/- ஆக மதிப்பிடப்பட்டது.

(10) 2017 மே 20 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் 2017 மார்ச் 31 ஆந் திகதியில் இருந்த ஒவ்வொரு சாதாரண பங்கிற்கும் ரூ. 1.50 வீதம் இறுதிப் பங்கிலாபம் செலுத்த கம்பனியின் பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

(11) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுதலுக்கு பணிப்பாளர் சபையினால் 2017 யூன் 05 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பிரசுரிப்பதற்கு ஏற்ற வடிவில், **றோயல் PLC** யின் கீழ்வரும் கூற்றுக்களைத் **தயாரிக்குக** :

(a) 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (11 புள்ளிகள்)

(b) 2017 மார்ச் 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்று (06 புள்ளிகள்)

(c) 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (03 புள்ளிகள்)

(d) 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்கள் பற்றிய கூற்று (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(a) **வ/ப மெகா சப்ளைஸ் (தனி) கம்பனி (MSL)** மற்றும் **வ/ப ஸ்மாட் டெக்னோலொஜிஸ் (தனி) கம்பனி (STL)** ஆகிய கம்பனிகளின் 2017 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிநிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**2017 மார்ச் 31 ஆந் திகதி**

**நிதி நிலைக் கூற்று** *(ரூ.'000)*

| | வ/ப மெகா சப்ளைஸ் (தனி) கம்பனி (MSL) | வ/ப ஸ்மாட் டெக்னோலொஜிஸ் (தனி) கம்பனி (STL) |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** : | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் | 50,000 | 21,500 |
| திரள் தேய்மானம் | (15,000) | (7,500) |
| முன்கொணரற் பெறுமதி | 35,000 | 14,000 |
| கம்பனி **STL** இல் முதலீடு | 20,000 | - |
| | **55,000** | **14,000** |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 12,100 | 10,900 |
| வியாபார வருமதிகள் | 36,400 | 9,600 |
| | **48,500** | **20,500** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **103,500** | **34,500** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 40,000 | 15,000 |
| கைக்கொள் இலாபம் | 22,500 | 14,600 |
| **மொத்த உரிமையாண்மை** | **62,500** | **29,600** |
| | | |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| வங்கிக் கடன் | 20,400 | - |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 5,500 | 2,500 |
| வங்கி மேலதிகப் பற்று | 15,100 | 2,400 |
| | **20,600** | **4,900** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **103,500** | **34,500** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி **MSL** கம்பனி **STL** கம்பனியின் சாதாரண பங்கு மூலதனத்தின் 80% இனைக் கொள்வனவு செய்தது.

(2) கொள்வனவுத் திகதியில் **STL** கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் சீர்மதிப்பு ரூ. 19 மில்லியனாகும்.

(3) கொள்வனவுத் திகதியில் **STL** கம்பனியின் கட்டுப்பாடற்றோர் நாட்டம் ரூ. 9 மில்லியனாகவும் அதன் ஏடுகளின்படி கைக்கொள் இலாபம் ரூ. 10 மில்லியனாகவும் இருந்தது.

(4) இரு கம்பனிகளும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் 20% இல் தேய்மானம் செய்கிறது.

(5) 2017 மார்ச் மாதத்தில் **MSL கம்பனி** ரூ. 500,000/- கிரயமான தொக்குகளை கிரயத்தில் 20% இலாபம் வைத்து **STL** கம்பனிக்கு விற்பனை செய்தது. இதில் 25% தொக்குகள் 2017 மார்ச் 31 ஆந் திகதியில் விற்பனை செய்யப்படாதிருந்தன.

(6) **MSL கம்பனியின்** வியாபார வருமதிகள் ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட ஊடுசெயல்கள் தொடர்பில் **STL கம்பனியிடமிருந்து** வருமதியாகவுள்ள ரூ. 200,000/- இனை உள்ளடக்கியது.

மேற்படி தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(i) ஒன்றித்தல் மீதான நன்மதிப்பினைக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(ii) 2017 மார்ச் 31 ஆந் திகதியில் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தினை **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(iii) 2017 மார்ச் 31 ஆந் திகதியின்படி ஒன்றித்த நிதிநிலைக் கூற்றினைத் **தயாரிக்குக.** (11 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** 2017 மார்ச் 31 மற்றும் 2016 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்காக கணிப்பிடப்பட்ட மூன்று விகிதங்கள் கீழ்வருமாறு :

| | | **2017** | **2016** |
|---|---|---|---|
| (1) | நெம்பு விகிதம் (Gearing Ratio) | 65% | 40% |
| (2) | ROCE | 9% | 6% |
| (3) | தொக்குப் புரள்வு விகிதம் | 15 தடவைகள் | 10 தடவைகள் |

**நீங்கள் செய்யவேண்டியது :**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் இந்த விகிதங்கள் ஒவ்வொன்றிலும் அதிகரிப்புகளுக்கான சாத்தியமான காரணங்கள் இரண்டினைக் (02) **கூறுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |